தினமணி

**தலையங்கம்:பத்தும் பறந்துபோம்!**

First Published : 13 Jan 2011 02:20:05 AM IST

ஏதோ கனவுலகத்திலிருந்து திடீரென்று விழித்துக் கொண்டதுபோல எல்லோரும் விலைவாசியைப் பற்றிப் பேசத் தொடங்கி இருக்கிறார்கள். அவசர அவசரமாகப் பிரதமர் தலைமையில் மத்திய அமைச்சரவை கூடி வெங்காய விலையைக் குறைப்பது பற்றியும், தக்காளி உற்பத்தியைப் பெருக்குவது பற்றியும், ஒட்டுமொத்த விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவது பற்றியும் விவாதிக்கிறது. தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடித்த கதையாக இத்தனை நாள்கள் கவலைப்படாமல் இருந்துவிட்டு, பிரச்னை கைமீறிப் போனபிறகு இவர்கள் தலையைப் பிய்த்துக் கொண்டு தீர்வுகாண முயல்வதைப் பார்க்கவும் கேட்கவும் வேடிக்கையாக இருக்கிறது.

கடந்த ஒரு மாதத்தில் சர்க்கரை விலை 1.3 சதவீதம் அதிகரித்திருக்கிறது. இரும்பு உருக்கு (ஸ்டீல்) விலை ஒரு டன்னுக்கு ரூ. 1,500-லிருந்து ரூ. 2,000 வரை உயர்ந்திருக்கிறது. கடந்த ஆறு மாதங்களில் பெட்ரோல் பொருள்களின் விலை 6 சதவீதம் முதல் 8 சதவீதம் வரை உயர்ந்திருக்கிறது. உணவுப் பொருள்களின் விலை என்று எடுத்துக்கொண்டால் 18.3 சதவீதம் உயர்ந்திருக்கிறது. வெங்காய விலை என்று எடுத்துக் கொண்டால் கடந்த ஆண்டைவிட 82.47 சதவீதமும், காய்கறி விலை 58.85 சதவீதமும் உயர்ந்திருக்கிறது. இதெல்லாம் அரசாங்கமே தரும் புள்ளிவிவரங்கள்.

ஏதோ வெங்காய விலை மட்டுமா மக்களைக் கண்ணீர்விட வைக்கிறது? பழங்கள், காய்கறிகள், பால், முட்டை, இறைச்சி, மீன், மசாலாப் பொருள்கள் என்று பரவலாக எல்லாப் பொருள்களும் சராசரி 15 முதல் 30 சதவீதத்துக்குக் குறையாமல் விலையேற்றத்தைக் கண்டிருக்கும் நிலைமை. இது ஒன்றும் திடீரென்று ஏற்பட்டுவிட்ட நிலைமையல்ல. கடந்த ஓராண்டாக இந்த விலையேற்றம் தொடர்ந்தவண்ணம் இருந்து வந்திருக்கிறது. இதைப் பிரச்னையாகக் கருதாமல், பருவநிலை மாற்றம் அடுத்த மகசூலில் நிலைமையைக் கட்டுப்படுத்திவிடும் என்கிற அசட்டு நம்பிக்கையில் ஆட்சியாளர்கள் அலைக்கற்றை ஒதுக்கீடு பற்றியும், ஆதர்ஷ் குடியிருப்பு பற்றியும், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் பற்றியும் கவலைப்பட்டுக் கொண்டிருந்ததன் விளைவுதான் இன்றைய கட்டுக்கடங்காத நிலைமை.

சராசரி இந்தியக் குடிமகன் சில்லறை வியாபாரிகளிடம் காய்கறி அல்லது உணவுப் பொருள்களுக்குத் தரும் விலைக்கும் மொத்த விற்பனை விலைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. அதேபோல, விவசாயி தனது விளைபொருள்களை விற்கும் விலைக்கும் மொத்த விற்பனை விலைக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. சில்லறை விற்பனையில் கிடைக்கும் லாபம் குறைந்தது 30 சதவீதம். ஒரு சில பொருள்களுக்கு இந்த இடைத்தரகர்கள் அடையும் லாபம், அங்கும் இங்கும் கடன் வாங்கி, மழையிலும் வெயிலிலும் போராடி, உழுது பயிரிட்டு அந்தப் பொருள்களை உற்பத்தி செய்த விவசாயிக்குக் கிடைக்கும் விலையைவிட அதிகம் என்றால் அந்தக் கொடுமையை என்னவென்று சொல்வது?

கடந்த இரண்டு ஆண்டுகளில் உள்நாட்டு உற்பத்தி, இறக்குமதி இரண்டையும் சேர்த்து நாம் சுமார் 350 லட்சம் டன் பருப்பு வகைகளைப் பயன்படுத்தி இருக்கிறோம். இதன் மொத்த மதிப்பு ரூ. 1.4 லட்சம் கோடி. அதாவது, சராசரியாக ஒரு டன்னுக்கு ரூ. 40,000. 1 கிலோ ரூ. 40. சில்லறை விற்பனையில் பொதுமக்கள் இந்தப் பருப்பு வகைகளை என்ன விலை கொடுத்து வாங்கினார்கள் தெரியுமா? குறைந்தது ரூ. 60 முதல் ரூ. 110வரை! ரூ. 60 என்று வைத்துக்கொண்டாலும்கூட 50 சதவீதம் லாபம் இடைத்தரகர்களுக்குப் போயிருக்கிறது. விவசாயிக்கு மிஞ்சியது உழைப்பும் கடனும்தான் என்பதுதான் வேதனையிலும் வேதனை.

இது ஓர் உதாரணம் மட்டுமே. அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய், காய்கறி, பழங்கள் என்று எல்லா பொருள்களிலும் இதேதான் நிலைமை. இதற்கு மூன்று முக்கியமான காரணங்கள். முதலாவதும் அடிப்படையானதுமான காரணம், முறையான சேமிப்புக் கிடங்கு வசதியோ, விற்பனை வசதியோ, விவசாயிக்கு முன்னுரிமை கொடுத்து விலை நிர்ணயம் செய்து அவரது நல்வாழ்வை உறுதிப்படுத்தும் நடவடிக்கையோ இல்லாதது. லஞ்சமும் ஊழலும் நிறைந்த பொதுவிநியோக முறை இருக்கும்வரை இந்தக் குறையைப் போக்க முடியாது என்பது தெரிந்தும், அதற்கான முயற்சிகளை அரசும் செய்யவில்லை. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் செய்ய ஊக்குவிக்கவில்லை.இரண்டாவது காரணம், விவசாயிக்கு முறையாக நிதியுதவி வழங்கி விவசாயத்தை கௌரவமான, லாபகரமான தொழிலாக நிலைநிறுத்த அரசு முயற்சிக்காதது. சமீபத்திய புள்ளிவிவரம் ஒன்றின்படி, 40 சதவீதம் விவசாயிகள் விவசாயம் செய்வதை விட்டுவிட்டார்கள் அல்லது விட்டுவிடத் தீர்மானித்திருக்கிறார்கள். இந்த விளைநிலங்கள் அரசின் அனுமதியுடனும், அரசியல்வாதிகளின் ஒத்துழைப்புடனும் வீட்டுமனைகளாக்கப்படுகின்றன. காரணம், ஊருக்குப் பசி தீர்க்கும் விவசாயம், விவசாயிக்குப் படியளக்கவில்லை, என்பதுதான்.

உலகின் எந்தப் பகுதியிலும், காலங்காலமாக அரசின் ஆதரவும், முறையான கடன் வசதிகளும் இல்லாமல் விவசாயம் தழைத்ததில்லை. இங்கே அவ்வப்போது கடன் நிவாரணம் என்ற பெயரில் வங்கிகளில் கடன் சுமை இறக்கப்படுகிறதே தவிர, விவசாயியின் சுமை இறக்கப்பட்டதே இல்லை. இடைத்தரகர்கள் விவசாயிகளுக்குத் தரப்படும் மானியங்களில் பாதிக்கு மேல் உண்டு கொழுக்கிறார்களே தவிர, விவசாயிக்கு முறையாக மானியங்கள் போய்ச் சேர்வதே கிடையாது.

கோடிக்கணக்கான ரூபாய் உர மானியம் என்கிற பெயரில் உரத் தயாரிப்பாளர்களுக்கு அளிக்கப்பட்டும், இன்னும் ஒரு ஹெக்டேருக்கான உரம் அதிகப்படவே இல்லையே, ஏன்? கோடிக்கணக்கான பணம் பாசன வசதி மேம்பாட்டுக்காக ஒதுக்கப்படுகிறதே தவிர, விளைநிலங்களின் பரப்பளவு அதிகரிக்கவில்லையே, ஏன்? பிறகு ஏன் விவசாயிகள் பயிரிடத் தயங்குகிறார்கள்? எங்கே போயிற்று அந்தப் பணம் எல்லாம்?

இந்தியாவின் மொத்தப் பொருளாதார வளர்ச்சி 8 சதவீதம் என்று மார்தட்டிக் கொள்கிறது அரக. ஆனால், கடந்த பத்து ஆண்டுகளாக விவசாய வளர்ச்சி வெறும் 2.2 சதவீதம்தான். மத்திய அரசில் விவசாயிகள் பிரச்னை மற்றும் விலைவாசிப் பிரச்னையில் தொடர்புடைய அமைச்சகங்கள் 12. மாநில அளவில் 5 அமைச்சகங்கள் விவசாய மற்றும் விலைவாசிப் பிரச்னைகளுடன் தொடர்புடையவை. இவை அனைத்தும் எப்போதாவது ஒன்றாக அமர்ந்து பிரச்னையை அலசி ஆராய்ந்தது உண்டா? தீர்வுகாண முயற்சித்தது உண்டா?

இத்தனை அமைச்சகங்கள், இத்தனை அதிகாரிகள், இவ்வளவு பெரிய நிர்வாக இயந்திரம். இவையெல்லாம் இருந்தும், தொலைநோக்குப் பார்வையுடனும் எச்சரிக்கையுடனும் மக்களின் உணவுப் பிரச்னைக்கு முன்னுரிமை கொடுக்கத் தவறும் ஓர் ஆட்சியை எப்படி நல்லாட்சி என்று ஏற்றுக் கொள்வது?

பொறுமை எல்லை மீறுகிறது. பசிவந்தால் பத்தும் பறந்துபோம்!

**பால் கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு**

First Published : 13 Jan 2011 01:05:55 AM IST

சென்னை, ஜன. 12: பிரதம பால் கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு ரூ. 125-லிருந்து ரூ. 500 வரை ஊதிய உயர்வு வழங்கப்படும் என்று பால்வளத் துறை அமைச்சர் உ. மதிவாணன் பேரவையில் அறிவித்தார்.

இது குறித்து சட்டப் பேரவையில் விதி 110-ன் கீழ் புதன்கிழமை அவர் அளித்த அறிக்கை:

பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்கள் லாபத்தில் செயல்படும் பட்சத்தில் அச்சங்கங்களின் பணியாளர்களுக்கு 20 சதவீதத்துக்கு மிகாமல் ஊதிய உயர்வு வழங்க ஏற்கெனவே உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 1-10-2009-ல் வழங்கப்பட்ட ஊதிய உயர்வில் இப்போது 54 சதவீத உயர்வு அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

அதன்படி, பணியாளர்களுக்கு ரூ. 125-லிருந்து ரூ. 500 வரை ஊதிய உயர்வு கிடைக்கும். 1-10-2009 முதல் வழங்கப்பட்ட ஊதிய உயர்வில் பயனடையாதவர்கள் மற்றும் 1-4-2009-க்குப் பிறகு பதிவு செய்யப்பட்ட, புதுப்பிக்கப்பட்ட சங்கங்களின் பணியாளர்களுக்கு ரூ. 125 வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

இதன் மூலம் தமிழகத்தில் உள்ள 8,246 பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் சுமார் 18,588 பணியாளர்கள் பயன் பெறுவார்கள். இந்த ஊதிய உயர்வு 1-1-2011 முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்றார் மதிவாணன்.

**விலைவாசியைக் குறைக்க கேரளம் ரூ. 80 கோடி ஒதுக்கீடு**

First Published : 13 Jan 2011 02:00:20 AM IST

திருவனந்தபுரம், ஜன.12: விலைவாசி உயர்வை சமாளிக்க பட்ஜெட்டில் நிதி ஒதுக்க கேரள மாநில அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2011-12-ம் நிதி ஆண்டுக்கான மாநில பட்ஜெட்டில் விலைவாசி உயர்வை சமாளிக்க ரூ. 80 கோடி ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கேரள மாநிலத்தின் பட்ஜெட் செலவு ரூ. 11,030 கோடியாகும். இதில் ரூ. 80 கோடி விலைவாசி உயர்வை சமாளிக்க ஒதுக்கப்பட்டுள்ளது. திடீரென சந்தையில் விலைகள் உயரும்போது அதைக் கட்டுப்படுத்த இந்த நிதி பயன்படுத்தப்படும். தகவல் தொழில்நுட்பத் துறை, சுற்றுலா ஆகியன மிக முக்கிய துறைகளாக கருதப்படுகின்றன. இத்துறைகளின் மேம்பாட்டுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கவும் அமைச்சரவை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக மாநில முதல்வர் வி.எஸ். அச்சுதானந்தன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். கல்வி, சுகாதாரம், சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிப்பதான திட்டங்களை செயல்படுத்தவும் முடிவு செய்யப்பட்டது. நடப்பாண்டில் விழிஞ்சம் சரக்குப் பெட்டக முனையம், கண்ணூர் விமான நிலையம் ஆகியவற்றை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கண்ணூர் விமான நிலைய மேம்பாட்டு பணியை தனியார் நிறுவனம் எடுத்துக் கொள்ள அனுமதிக்க மாட்டோம் என்று முதல்வர் குறிப்பிட்டார். இதைப் போன்ற பெரிய திட்டப் பணிகளில் தனியார் நிறுவனங்கள் ஒன்று மட்டுமே கோலோச்சுவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று அவர் மேலும் கூறினார்.

**விலை உயர்வைக் கட்டுப்படுத்த முதல்வர் நாளை ஆலோசனை**

First Published : 13 Jan 2011 01:06:13 AM IST

சென்னை, ஜன. 12: விலை உயர்வைக் கட்டுப்படுத்த முதல்வர் கருணாநிதி தலைமையில் வெள்ளிக்கிழமை புதிய தலைமைச் செயலக வளாகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடக்கிறது.

விலை உயர்வைக் கட்டுப்படுத்த மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து, தமிழக அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள்பற்றி இக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்படவுள்ளது.

இனி வரும் காலங்களில் விலைவாசியைக் கட்டுப்படுத்த மத்திய அரசுடன் இணைந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இதில் விவாதிக்கப்படும்.

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள புதிய தலைமைச் செயலகத்தில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

**இலவச மரக்கன்று வழங்கும் வனவியல் மையம்**

First Published : 13 Jan 2011 12:40:00 AM IST



பூண்டியில் உள்ள வனவியல் விரிவாக்க மையத்தில் வளர்க்கப்பட்டு வரும் பல்வேறு மரக்கன்றுகள்.

திருவள்ளூர்: சொந்த நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு இலவசமாக மரக்கன்றுகள், அதை வைத்து பராமரிக்க முறையான பயிற்சி மற்றும் கன்றுக்கு ஊக்கத்தொகை என பல வகைகளில் விவசாயிகளின் வாழ்க்கையை வனவியல் விரிவாக்க மையம் வளமாக்கி வருகிறது.

÷தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் அரசு சார்பில் வனவியல் விரிவாக்க மையம் இயங்கி வருகிறது. திருவள்ளூர்- ஊத்துக்கோட்டை சாலையில் பூண்டியில் திருவள்ளூர் மாவட்ட வனவியல் விரிவாக்க மையம் 3.10 ஹெக்டேர் பரப்பளவில் இயங்கி வருகிறது. இங்கு தேக்கு, சவுக்கு, குமிழ், மகானி, வேங்கை, செம்மரம், மூங்கில், சவுக்கு உள்ளிட்ட மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குகிறது.

÷குறைந்தபட்சம் ஒரு ஏக்கர் நிலம் சொந்தமாக வைத்துள்ள விவசாயிகள் நிலத்துக்கு உரிய ஆவணங்களும், ரேஷன்கார்டு ஆகியவற்றுடன் வனவிரிவாக்க மையத்தை அணுகினால் வனவிரிவாக்க மைய அலுவலர்கள் விவசாயிகளின் இடத்துக்கே நேரில் சென்று ஆய்வு செய்து அந்த மண்ணின் வளத்துக்கேற்றவாறு மரக்கன்றுகளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவர். ஒரு ஏக்கருக்கு 2000 கன்றுகள் வரை வழங்கி அதை முறையாக பராமரிக்கும் பயிற்சி, மண் புழு

உரம் மற்றும் தேவையான வழிமுறைகளையும் விவசாயிகளுக்கு எடுத்து கூறி வளம் பெறச் செய்கின்றனர்.

**ஊக்கத்தொகை:** தங்களது வயலில் பயிரிட்டிருந்தாலும் அதன் வரப்பு ஓரங்களில் மரக்கன்றுகளை வரிசையாக நட்டு அதன் மூலம் விவசாயிகள் கூடுதல் வளம் பெற வழிகாட்டுகின்றனர். நாளடைவில் வனவியல் விரிவாக்க மைய அலுவலர்களின் வழிகாட்டுதலை முறையாக பின்பற்றி மரக்கன்றுகளை முறையாக பராமரிக்கும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகையாக ஒரு கன்றுக்கு ரூ.5 வழங்குகின்றனர்.

÷தேக்கு 20 ஆண்டுகள், மகானி 20 ஆண்டுகள், வேங்கை 20 ஆண்டுகள், குமிழ் 7 ஆண்டுகள், மூங்கில் 3 ஆண்டுகள், சவுக்கு 4 ஆண்டுகள் என பருவத்துக்கு ஏற்றவாறு மரங்கள் விவசாயிகளுக்கு பெருத்த லாபத்தை ஏற்படுத்தி தருகின்றன.

**மரக்கன்று விநியோகம்:** இது குறித்து பூண்டியில் உள்ள வனவியல் விரிவாக்க மைய அலுவலர் சிவலிங்கம் கூறும்போது, "3.10 ஏக்கரில் இங்கு தேக்கு, வேங்கை, குமிழ், மகானி உள்ளிட்ட பல்வேறு மரக்கன்றுகளை வளர்த்து அதை உரிய பருவத்தில், நாடி வரும் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறோம். கடந்த 2009-ம் ஆண்டு இம்மாவட்டத்தில் 60 ஆயிரம் மரக்கன்றுகளை விவசாயிகளுக்கு வழங்கியுள்ளோம்.

÷வனவியல் விரிவாக்க மையம் குறித்த விழிப்புணர்வு விவசாயிகளுக்கு முழு அளவில் ஏற்படாததால் தற்போது கிராமப்புறங்களில் சென்று பயிற்சி கூட்டங்கள் நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துகிறோம். 2011-ம் ஆண்டில் 2 லட்சம் மரக்கன்றுகளை இம்மாவட்ட விவசாயிகளுக்கு வழங்க இலக்கு நிர்ணயித்து அதற்காக முயற்சி மேற்கொண்டு வருகிறோம்' என்றார். விவசாயிகள் மேலும் விவரங்களுக்கு 9994347739 என்ற எண்ணில் வன விரிவாக்க மைய அலுவலர் சிவலிங்கத்தை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

**ராமேஸ்வரம் குண்டு மல்லி ஆண்டுக்கு ரூபாய் ஒரு லட்சம் லாபம்**

First Published : 13 Jan 2011 12:35:00 AM IST



காஞ்சிபுரம் அருகே உள்ள விச்சந்தாங்கல் தோட்டக் கலைத்துறை விவசாய பண்ணையில் பயிர் செய்யப்பட்டுள்ள ராமேஸ்வரம் குண்டு மல்லி.

காஞ்சிபுரம்: ஓர் ஆண்டில் 9 மாதங்களுக்கு பூக்களை தரும் ராமேஸ்வரம் குண்டு மல்லியை பயிர் செய்வதன் மூலம் ஹெக்டேர் ஒன்றுக்கு ஆண்டுக்கு ரூ.1 லட்சம் வரை விவசாயிகள் லாபம் சம்பாதிக்க முடியும்.

÷இந்த வகை மல்லிகை பூச்செடியை விவசாயிகள் முதலில் பயிர் செய்ய ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.25 ஆயிரம் வரை செலவாகும். ஆனால் தொடர்ந்து உரங்களை வைத்தால் போதும். 10 ஆண்டுகள் வரை பூக்கள் கொடுத்து பலன் தரும். முறையாக தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

÷இந்த ராமேஸ்வரம் மல்லியை பொறுத்தவரை பயிர் செய்த 6-வது மாதத்தில் இருந்து பூக்களை கொடுக்கும். ஓர் ஆண்டுக்கு 9 மாதங்கள் பூக்களைக் கொடுக்கும். ஒன்று விட்டு ஒரு நாள் பூக்களை பறிக்கலாம். முறையாக உரங்களை வைத்தால் ஒரு நாளைக்கு 50 கிலோ முதல் 100 கிலோ வரை பூக்கள் கிடைக்கும்.

÷இந்தப் பூக்களின் விலை நிலையாக இருக்காது. கிலோ ரூ.50-ல் இருந்து ரூ.200 வரை கூட விற்கும். திருமணம், திருவிழாக்காலங்களில் விலை அதிகம் இருக்கும். சராசரியாக ஒரு நாள் விட்டு ஒரு நாளுக்கு ரூ.2,500 கிடைக்கும். பறிப்பதற்கான ஆள் கூலி, உரச் செலவுகள் என்று அனைத்து செலவுகளையும் கழித்தாலும் ஓர் ஆண்டில் ரூ.1 லட்சம் வரை லாபம் பெற முடியும் என்று விவசாய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

எங்கு கிடைக்கும்? இந்த வகை மல்லி செடிகள் பல்வேறு தனியார் பண்ணைகளிலும், அரசின் தோட்டக் கலைத் துறை பண்ணைகளிலும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. செடிகள் வாங்கும்போது விவசாயிகள் தரமான செடிகளை வாங்கி நட வேண்டும். பூக்கள் பூக்க ஆரம்பித்துவிட்டால் தொடர்ந்து உரங்களை வைத்து 10 ஆண்டுகள் பூக்களைப் பறிக்க முடியும். நாம் செடி வைக்கும் மாதத்தை பொறுத்து ஓர் ஆண்டில் 9 மாதங்கள் பூக்களை எடுக்கலாம். ஏதேனும் மூன்று மாதங்கள் விளைச்சல் இருக்காது.

மானியம் உண்டு: இந்த பூ விளைச்சல் குறித்து தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் கோமதியிடம் கேட்டபோது அவர் கூறியது:

÷ராமேஸ்வரம் குண்டு மல்லி நல்ல லாபம் தரக்கூடியது. குறைந்த பட்சம் ஆண்டுக்கு ரூ.1 லட்சம் லாபம் கிடைக்கும். இந்த வகை மல்லிகள் 9 மாதங்கள் பூத்து விவசாயிகளுக்கு பலன் கொடுக்கும். இந்த வகை தரமான செடிகள் தோட்டக் கலைத்துறை பண்ணைகளில் செடி ஒன்று ரூ.5-க்கு விற்கப்படுகின்றன. ஒரு ஹெக்டேருக்கு 6 ஆயிரம் கன்றுகள் தேவைப்படும். இந்த வகை மல்லியை பயிர் செய்ய குறிப்பிட்ட அளவு விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.7500 மானியம் தருகிறோம். இதை பணமாக தரமாட்டோம். ஒரு ஹெக்டேருக்கு தேவையான ரூ.7500 மதிப்புள்ள 1500 மல்லிச் செடிகளை கொடுத்துவிடுவோம். விவசாயிகள் தனியாகவும் வாங்கி பயிர் செய்யலாம் என்றார்.

**வைகை பாசன விவசாயிகள் சங்க கூட்டம்**

First Published : 12 Jan 2011 11:07:52 AM IST

பரமக்குடி, ஜன. 11: வைகை பாசன விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் எஸ்.டி.தவசீலன் தலைமை வகித்தார். செயலாளர் மு.மதுரைவீரன், துணைத் தலைவர்கள் பொன்.தங்கச்சாமி, வி.சண்முகம், உ.களஞ்சியம், எஸ்.வடிவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணைச் செயலாளர் கே.அழகர்சாமி வரவேற்றார்.

வைகை ஆற்று மணல் குவாரிகளில் விதிமுறைகளை மீறி 3 அடிக்குப் பதிலாக 20 அடி ஆழம் வரை மணல் அள்ளப்படுவதை கண்டித்தும், ஜே.சி.பி. இயந்திரத்தை பயன்படுத்துவதை தடுத்து நிறுத்தக் கோரியும், 2008-09, 2009-10 ஆம் ஆண்டுக்கான பயிர் காப்பீட்டு தொகையை உடனே வழங்கக் கோரியும், 2010-11 ஆம் ஆண்டில் தொடர்ந்து பெய்த மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கக் கோரியும், பரமக்குடி - எமனேஸ்வரம் செல்லும் தரைப்பாலம் பகுதியில் நகராட்சி கழிவுகளை கொட்டுவதை நிறுத்தக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில் சங்க துணைச் செயலாளர்கள் எஸ்.கே.பாலசுந்தரம், எம்.சுந்தர்ராஜன், பி.வடி வேல், எம்.பெரியசாமி உள்பட சங்க நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர். அழ.சாமி ராஜு நன்றி கூறினார்.

**செம்மை நெல் விதை உற்பத்தி பயிற்சி**

First Published : 12 Jan 2011 01:17:16 PM IST

திருவண்ணாமலை, ஜன. 11: திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம் சார்பில் நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் ஏரிப்பாசன விவசாயிகளுக்கு ராஜராஜன் 1000 செம்மைநெல் விதை உற்பத்தி சாகுபடி, ஒருங்கிணைந்த உர நிர்வாக பயிற்சி முகாம் மேல்சிறுபாக்கம், வீரபாண்டி கிராமங்களில் திங்கள்கிழமை நடைபெற்றது.

மேல்சிறுபாக்கத்தில் நடைபெற்ற முகாமுக்கு ஆராய்ச்சி நிலைய தலைவர் ராமமூர்த்தி தலைமை தாங்கினார்.

நெல் சாகுபடிக்குத் தேவையான இடுபொருள்களான விதை, நீர், உரங்களை குறைந்த அளவே பயன்படுத்துதல், இளம்வயது நாற்றுகளை நடுதல், கருவி மூலம் களையெடுத்தல் போன்றவற்றின் மூலம் கூடுதல் மகசூல் கிடைக்கிறது. சான்று பெற்ற விதையை தேர்வு செய்தல், விதை நேர்த்தி,

பச்சை வண்ண அட்டையை பயன்படுத்தி, பயிர்களுக்கு தேவை ஏற்படும் காலத்தில் தழைச்சத்தை மேலுரமாக இடுதல் போன்றவை குறித்து திட்ட விஞ்ஞானி எஸ்.ரமேஷ் விவரித்தார்.

வீரபாண்டி கிராமத்தில் நெல்விதை உற்பத்தி சாகுபடி பயிற்சி நடைபெற்றது. "முக்கிய இடுபொருள்களான தரமான விதை, விதைப்புச் சட்டம், உரம், பயிர் பாதுகாப்பு மருந்துகள் விவசாயிகளுக்கு இலவசமாக தரப்படுகிறது. கலப்பு பயிர்களை எடுத்தல், போதுமான அளவு உரமிடுதல், அறுவடைக்கு பின் 13 சதவீதம் ஈரப்பதத்தை காத்தல் போன்றவற்றை பின்பற்ற வேண்டும்' என விவசாயிகளுக்கு செயல் விளக்கம் தரப்பட்டது.

இளநிலை ஆராய்ச்சியாளர்கள் பு.அமலா, ப.பார்த்தசாரதி, 100 முன்னோடி விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**வேளாண் இடுபொருள் இயக்க முகாம்**

First Published : 12 Jan 2011 01:13:43 PM IST

அரக்கோணம், ஜன.11: நெமிலி வட்டாரம், ஆட்டுபாக்கம் ஊராட்சிக்கு உள்பட்ட மஞ்சம்பாடியில் வேளாண் இடுபொருள் இயக்க முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

முகாமுக்கு ஆட்டுபாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் ஏ.வி.மோகன் தலைமை தாங்கினார்.

விவசாயிகளுக்கு மானிய விலையில் உயிர்உரங்களை நெமிலி வட்டார வேளாண் உதவி இயக்குநர் (பொறுப்பு) ஒய்.எம்.முபாரக் வழங்கினார்.

விதை கிராமத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் நெல்விதைகளும் வழங்கப்பட்டன. உதவி விதைச் சான்று அலுவலர் ஏழுமலை, உதவி வேளாண் அலுவலர்கள் கணேசன், பழனி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**விலை குறைவு: தம்மம்பட்டி உழவர்சந்தையில் குவியும் மக்கள்**

First Published : 12 Jan 2011 01:00:59 PM IST

தம்மம்பட்டி, ஜன. 11: தம்மம்பட்டி உழவர் சந்தையில் காய்கறிகளின் விலை குறைவாக இருப்பதால், அதிகாலை 5 மணி முதலே பொதுமக்கள் காய்கறி வாங்கு குவிந்து விடுகின்றனர்.

தம்மம்பட்டியில் கடந்த 19-ல் உழவர்சந்தை திறந்து வைக்கப்பட்டது. வெளி மார்க்கெட் கடைகள், மண்டிகளைவிட உழவர் சந்தையில் காய்கறிகளின் விலை குறைவாக இருப்பதால் பொதுமக்கள் கூட்டம் அதிகமாக காணப்படுகிறது.

கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் காலை 5 மணி முதலே உழவர் சந்தையில் காய்கறிகளைச் வாங்கிச்செல்கின்றனர். பொதுமக்கள் கூட்டம், கூட்டமாக வருவதால் காலை 8 மணிக்குள் பெரும்பாலான காய்கறிகள் விற்று முடிந்துவிடுகிறது.

வெளி மார்க்கெட்டில் ரூ. 40-க்கு விற்கப்படும் ஒரு கிலோ தக்காளி, உழவர் சந்தையில் ரூ. 28-க்கு விற்கப்படுகிறது. இதனால் உழவர் சந்தையில் விலைப்பட்டியல் அறிவிக்கும்போதே மக்கள் காய்கறிகளை வாங்கிச்சென்று விடுகின்றனர்.

**கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.1925 விலை நிர்ணயம்**

First Published : 12 Jan 2011 12:08:27 PM IST

அரியலூர், ஜன.11: அரியலூர் மாவட்டம், சாத்தமங்கலம் கோத்தாரி கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கத்துக்கும், கோத்தாரி நிர்வாகத்துக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் முடிவில், கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 1925 என்று விலை நிர்ணயம் செய்து முடிவு செய்யப்பட்டது.

சாத்தமங்கலத்தில் உள்ள கோத்தாரி சர்க்கரை ஆலை வளாகத்தில் கரும்பு விலை நிர்யணம் குறித்த பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்தப் பேச்சுவார்த்தையில் 2011-12 ஆம் ஆண்டிற்கு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.1925 விலை என்று (வண்டி வாடகை இல்லாமல்) நிர்ணயம் செய்து முடிவு செய்யப்பட்டது.

கோத்தாரி சர்க்கரை ஆலையின் சார்பில் அந்த ஆலையின் பொது மேலாளர் கிருஷ்ணமூர்த்தி, துணைப் பொது மேலாளர் ஆனந்தன் ஆகியோரும், விவசாயிகள் சங்கம் சார்பில் சங்கத் தலைவர் முருகானந்தம், பொருளர் சௌந்தராஜன், இலந்தைக்கூடம் தலைவர் குமரவேல், ஒன்றியக் குழு உறுப்பினர் தர்மலிங்கம், வழக்குரைஞர் சந்திரசேகரன், அன்புகணேசன் உள்ளிட்டோர் பேச்சுவார்த்தையில் பங்கேற்றனர்.

அதில் இந்த ஆண்டிற்கு கரும்பு வெட்டு கூலியாக டன் ஒன்றுக்கு ரூ. 300 மட்டும் விவசாயிகளிடம் பிடித்தம் செய்ய வேண்டும். கரும்பு வெட்டியவுடன் முழு தொகையையும் 15 நாள்களுக்குள் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும், பொங்கலுக்கு சர்க்கரையை நியாய விலைக்கடை விலையில் வழங்க வேண்டும் என விவசாயிகள் சங்கம் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

**உழவர் சந்தை: விவசாயிகள் விற்பனை புறக்கணிப்பு**

First Published : 12 Jan 2011 11:13:08 AM IST

கம்பம், ஜன. 11: கம்பம் நகரில் உள்ள உழவர் சந்தையில் மலைக் காய்களுக்கு தனியாக ஒரு இடத்தை நிர்வாகம் ஒதுக்கியதைக் கண்டித்து, விவசாயிகள் விற்பனை செய்யாமல் திங்கள்கிழமை வெளியேறினர்.

கம்பம் காந்திஜி பூங்கா அருகில் 2 ஏக்கர் பரப்பளவில் உழவர் சந்தை அமைந்துள்ளது. உழவர் சந்தையில் 53 கடைகள் இயங்கி வருகின்றன. மேலும், 50-க்கும் மேற்பட்ட தரைக் கடைகளும் இயங்கி வருகின்றன.

மாவட்டத்தில் அதிக அளவில் காய்கறிகளை இங்கு விவசாயிகள் விற்பனைக்குக் கொண்டு வருகின்றனர். கேரளத்தின் எல்லை நகரமாக கம்பம் இருப்பதால், அங்கிருந்து வந்து ஏராளமனோர் காய்கறிகளை வாங்கிச் செல்கின்றனர்.

கம்பம் உழவர் சந்தையில் மாவட்டத்தில் அதிகபட்சமாக சராசரியாக தினந்தோறும் 35- ஆயிரம் முதல் 45 ஆயிரம் கிலோ வரை காய்கறிகள் விற்பனை ஆகி வருகின்றன.

மேலும், கேரட், உருளைகிழங்கு, பல்லாரி, முறுக்கு பீன்ஸ், பட்டர்பீன்ஸ், பச்சைப் பட்டாணி போன்ற மலை காய்கறிகளுக்கான சிறப்பு கடைகளும் இங்கு இயங்கி வருகின்றன.

இந்தக் கடைகளை டான்வா மகளிர் குழுவைச் சேர்ந்த பெண்களும், விவசாயிகள் 11 பேரும் நடத்தி வருகின்றனர். மலைக் காய்கறிகளை உழவர் சந்தை வளாகத்தில் பல ஆண்டுகளாக வெவ்வேறு இடங்களில் விற்பனை செய்து வந்தனர்.

இந் நிலையில், ஞாயிற்றுகிழமை உழவர் சந்தையின் நிர்வாக அலுவலர் தெய்வேந்திரன் மலைக் காய்கறிகள் விற்பனை செய்யும் 11 விவசாயிகளும் ஒரே இடத்தில் விற்பனை செய்ய இடம் ஒதுக்கப்பட்டது.

இந்த விவசாயிகள் அனைவரும் ஒரே இடத்தில் ஒரே பொருளை விற்பனை செய்வதால், பொதுமக்கள் யாரிடம் வாங்குவது என்று பிரச்னை ஏற்பட்டு வருவதாக கூறி திங்கள்கிழமை காலை 11 கடைகளைச் சேர்ந்த விவசாயிகளும் வியாபாரம் செய்யாமல் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

தகவல் கிடைத்த நிர்வாக அலுவலர் தெய்வேந்திரன் விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி, தரம் குறையாமல், பொதுமக்கள் ஏமாற்றப்படாமல் வழக்கம் போல் நாளை முதல் கடைகள் வைத்து கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

**வெல்லம் உற்பத்தியும், கரும்பு அறுவடையும் தீவிரம்**

First Published : 12 Jan 2011 01:00:28 PM IST

ஓமலூர், ஜன. 11: பொங்கல் பண்டிகைக்கு இன்னும் சில தினங்களே உள்ளதால் அதற்கான முன்னேற்பாட்டுப் பணிகள் ஓமலூர் வட்டார கிராமப் பகுதிகளில் தீவிரமடைந்துள்ளது.

ஓமலூர் வட்டாரத்தில் உள்ள காமலாபுரம், கருப்பூர், வெள்ளாளப்பட்டி, சர்க்கரைச்செட்டிப்பட்டி, டேனிஸ்பேட்டை உள்ளிட்ட கிராமங்களில் 1500-க்கும் அதிகமான ஏக்கர் பரப்பளவில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. ரோஸ் கரும்பு,போண்டா கரும்பு, பனிக் கரும்பு, 707, மஞ்சள் கரும்பு என ஐம்பதுக்கும் மேற்பட்ட வகை கரும்புகள் பயிரிடப்பட்டுள்ளன.

அறுவடை செய்யப்பட்ட கரும்புகளை வெல்லமாக மாற்றும் பணியில் ஓமலூர் பகுதியில் உள்ள 300-க்கும் மேற்பட்ட கரும்பாலைகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. வெல்லம் தயாரிக்கும் பணி இரவு பகலாக நடைபெற்று வருகிறது. உருண்டை வெல்லம், மண்டை வெல்லம் மற்றும் அச்சு வெல்லம் ஆகிய மூன்று வகைகள் தயாரிக்கப்பட்டு தலா 31 கிலோ கொண்ட ஒரு சிப்பமாக சேலம், தருமபுரி, விழுப்புரம், நாமக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

இதேபோன்று பொங்கல் பண்டிகையின் மற்றொரு முக்கிய அம்சமான கரும்பு அறுவடையும் களைகட்டியுள்ளது. இதற்காக பச்சனம்பட்டி, திண்டமங்கலம், முத்துநாயக்கன்பட்டி, பஞ்சுகாளிப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ள பனிக் கரும்புகள் அறுவடையாகி வருகிறது.

இவை மும்பை உள்ளிட்ட தமிழர்கள் வசிக்கும் வடமாநிலப் பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது.

மாட்டுப் பொங்கலன்று மாடுகளுக்கு அணிவிக்கப்படும் மூக்கணாங்கயிறு, மணிக்கயிறு, முஞ்சான், கழுத்துக்கயிறு, கொம்புக்கயிறு, கழுத்துக்கட்டி, குத்துக்கயிறு, மூக்கு குத்துக்கயிறு உள்ளிட்ட கயிறு வகைகள் பலவித வண்ணங்களில் தயாரிக்கும் பணி ஓமலூர் அருகேயுள்ள ஆட்டுக்காரனூர், குருக்குப்பட்டி, மாணிக்கம்பட்டி, திருமனூர் கிராமங்களில் நடைபெற்று வருகிறது.

இந்தக் கயிறுகள் பொங்கலுக்கு இரண்டு நாட்கள் முன்பாக தஞ்சாவூர், புதுக்கோட்டை,திருவண்ணாமலை, ஆரணி, வந்தவாசி, வேலூர் உள்ளிட்ட பல்வேறு ஊர்களுக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகின்றன.

பொங்கல் பண்டிகை கொண்டாட்டத்திற்கு அழகு சேர்க்கும் மேற்கண்ட பணிகள் ஓமலூர் வட்டாரப் பகுதிகளில் இரவு, பகலாக நடந்து வருகிறது.

**வாழை பயிரிட விவசாயிகள் ஆர்வம்**

First Published : 12 Jan 2011 06:03:35 PM IST

பல்லடம், ஜன. 11:பல்லடம், பொங்கலூர் பகுதியில் வாழை சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது.

பல்லடம், பொங்கலூர் பகுதியில் கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதத்தில் நல்ல மழை பெய்திருப்பதால் குளம், குட்டைகளில் தண்ணீர் நிரம்பியுள்ளது.

பி.ஏ.பி வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

வாழைக்கு சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க வங்கி கடன் உதவி கிடைப்பதாலும், வாழைக்கு தண்ணீர் பாய்ச்ச தனியாக ஆட்கள் வைக்க வேண்டிய அவசியம் தவிர்க்கப்படுவதாலும் மார்க்கெட்டில் வாழைக்கு நல்ல விலை கிடைப்பதாலும் வாழை சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டுக்கின்றனர்.

மார்கழி மாதத்தில் பனி பொழிவு அதிகமாக இருப்பதால் வாழை பயிரிட சிறந்த காலமாகும். இந்த மாதத்தில் பயிரிடப்படும் வாழை காற்று அதிகம் வீசும் ஆடியில்
வளர்ச்சி அடைந்து காற்றை எதிர்கொள்ளும் தன்மையுடன் திகழும், வாழை சேதம் அடையாது. இதனால் மார்கழி மாதத்தையே விவசாயிகள் வாழை சாகுபடி செய்ய தேர்வு செய்கின்றனர். தற்போது பல்லடம், பொங்கலூர் பகுதியில் வாழை சாகுபடி கடந்த ஆண்டை விட நடப்பு ஆண்டில் அதிகரித்துள்ளது.

தினமலர்

**அதிக பனிப்பொழிவால் உளுந்து விளைச்சல் அமோகம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2011,01:42 IST

சிறுபாக்கம் : வேப்பூர் பகுதியில் அதிக பனிப்பொழிவால் உளுந்து விளைச்சல் வழக்கத்தை விட அதிகரித்துள்ளது.
சிறுபாக்கம், வேப்பூர் பகுதிகளில் கடந்த இரண்டு மாதங்களாக கனமழை பெய்தது. இதனால் நீர்பாசனம் மற்றும் மானாவாரி பயிர்கள் சேதமடைந்தன. இதனைத் தொடர்ந்து விவசாயிகள் குறுகிய கால ஊடு பயிரான உளுந்து பயிரை விளைவித்தனர். இதில் வம்பன், கோவை 80, ஏ.டி.கே., ஆகிய வீரிய ரக உளுந்தை விவசாயிகள் அதிகளவில் பயிரிட்டனர். தற்போது பனிபொழிவு அதிகமாக உள்ளதால் உளுந்து விளைச்சல் அமோகமாக உள்ளது. இதனால் உளுந்து பயிரிட்டுள்ள விவசாயிகள் எதிர்பார்த்த அளவு சாகுபடி கிடைக்கும் என்ற மகிழ்ச்சியில் உள்ளனர்.

**பயிர் பாதிப்பு நிவாரணம் வழங்கும் பணி துவங்கியது**

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2011,01:33 IST

காட்டுமன்னார்கோவில் : காட்டுமன்னார்கோவில் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணம் வழங்கும் பணி துவங்கியது. காட்டுமன்னார்கோவில், சிதம்பரம் பகுதியில் மழை, வெள்ளத்தால் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கின. பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணம் வழங்க கணக்கெடுப்பு பணி நடத்தப்பட்டு முடிவடைந்ததையொட்டி

காட்டுமன்னார்கோவில் பகுதிகளில் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலம் மோவூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்குட்பட்ட முட்டம், குஞ்சமேடு, கால்நாட்டாம்புலியூர், ஓமாம்புலியூர், குணவாசல், குச்சூர், கருப்பேரி, அழிஞ்சிமங்கலம் கிராமங்களில் நிவாரணம் வழங்கும் பணி துவங்கியது. முட்டம், கால் நாட்டம்புலியூர், குணவாசல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு வங்கி தனி அலுவலர் ராதாகிருஷ்ணன் நிவாரணம் வழங்கினார்.

**விவசாயிகளுக்கு மழை நிவாரணம் ரூ.17.91 கோடி நிதி ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2011,01:32 IST

கடலூர் : வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இழப்பீட்டு தொகையாக 17.91 கோடி ரூபாய் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கலெக்டர் சீத்தாராமன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையால் முழுமையாக சேதமடைந்த 940 குடிசைகளுக்கு தலா 5,000 வீதம் 17 லட்சமும், பகுதி சேதமடைந்த 11 ஆயிரத்து 719 குடிசைகளுக்கு தலா 2,500 வீதம் 2.93 கோடி ரூபாயும், வெள்ளம் சூழ்ந்த பகுதி வீடுகளுக்கு தலா 1,500 வீதம் 45 ஆயிரத்து 343 வீடுகளுக்கு 6.80 கோடியும், 4,400 நெசவாளர் வீடுகளுக்கு தலா 1,500 வீதம் 66.60 லட்சம் என மொத்தம் 62 ஆயிரத்து 442 வீடுகளுக்கு 10.87 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று மழை மற்றும் வெள்ளத்தால் சேதமடைந்த 57 ஆயிரத்து 892 ஏக்கர் பயிர்களுக்கு 15.66 கோடி ரூபாயும், 7 ஆயிரத்து 498 ஏக்கர் தோட்டக்கலை பயிர்களுக்கு 2.25 கோடி ரூபாய் என மொத்தம் 17.91 கோடி ரூபாய் நிவாரணத் தொகையாக மாவட்டத்தில் உள்ள 142 தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளுக்க வழங்கப்பட்ட 50 ஆயிரம் விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேலும், பயிர் ஆய்வு பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எனவே மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கான நிவாரணத் தொகையை சம்மந்தப்பட்ட தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளை அணுகி பெற்றுக் கொகள்ளலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கலெக்டர் தெரிவித்துள்ளார்.

**கள்ளக்குறிச்சி வாரச் சந்தையில் ரூ. 60 லட்சம் பருத்தி விற்பனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2011,01:56 IST

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சியில் நேற்று நடந்த பருத்தி சந்தையில், 60 லட்சம் ரூபாய்க்கு பஞ்சு மூட்டைகள் விற்பனையாகின. விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி பகுதிகளில் சாகுபடி

செய்யப்பட்ட பருத்தி தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது. கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் விற்பனை கூட்டுறவு சங்கத்தின் மூலம், கடந்த மாதம் 15ம் தேதி பருத்தி வாரச் சந்தை துவக்கப்பட்டது. நேற்று நடந்த பருத்தி சந்தையில் பஞ்சு மூட்டைகளின் வரத்து அதிகமாக இருந்தது. நேற்று ஒரே நாளில், 60 லட்சம் ரூபாய்க்கு, 3,800 பஞ்சு மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டன. நேற்று ஒரு குவிண்டால், டி.சி.எச்., ரக பருத்தி அதிகபட்சம், 5,340 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக 5,100, எல்.ஆர்.ஏ., ரக பருத்தி அதிகபட்சம், 4,996, குறைந்தபட்சமாக, 4,629 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்பட்டது. இந்தாண்டில் விற்பனை இலக்காக, ஒன்பது கோடியே 70 லட்சம் ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கள்ளக்குறிச்சி வாரச் சந்தையில், இதுவரை, 85 லட்சம் ரூபாய்க்கு பஞ்சு மூட்டைகள் விற்பனையாகி உள்ளன.

**ராஜராஜன் 1000 நெற்பயிர்கள் கருகியதால் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2011,01:48 IST

விழுப்புரம் : விழுப்புரம் அருகே வேளாண்துறை அறிவுரையில் ராஜராஜன் 1000 திட்டத்தில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் முற்றிலும் கருகிப் போனதால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். விழுப்புரம் மாவட்டத்தில் ராஜராஜன் 1000 புதிய ரக நெற்பயிர் (செம்மை நெல் சாகுபடி) பரவலாக பயிரிடப்பட்டு வருகிறது. குறைந்த செலவில் அதிக மகசூல் தரும் இத்திட்டத்தில் பயிரிட விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள், உரங்கள் வழங்கி வேளாண்மைத் துறையினர் ஊக்கப்படுத்தி வருகின்றனர்.

இந்த வகையில் விழுப்புரம் அருகே உள்ள கண்டமானடி கிராமத்தில் கடந்த நவம்பர் மாதத்தில் விதைநெல் வழங்கப்பட்டு, அப்பகுதியைச் சேர்ந்த 10க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிரிட்டிருந்தனர். நாற்று நட்டு பசுமையாக வளர்ந்த நெற்பயிர்கள் திடீரென மர்ம நோய் தாக்குதலால் அழுகிய நிலைக்கு மாறியது. தொடர்ந்து அப்பகுதியில் 10 ஏக்கர் அளவில் வைத்திருந்த அனைத்து விவசாயிகளின் பயிர்களும் முற்றிலும் காய்ந்து போனது. இது குறித்து பாதிக்கப்பட்ட விவசாயி ராதாகிருஷ்ணன் கூறும்போது., திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் அரசு அறிமுகப்படுத்திய ராஜராஜன் 1000 ரக நெல் சாகுபடி செய்ய புதிய ரகமான கோ 49 ரக விதை நெல் கண்டமானடி பகுதி உழவர் மன்றத்தைச் சேர்ந்த எனக்கும், ராஜாராம், வசந்தா, மூர்த்தி உள்ளிட்ட 10 விவசாயிகளுக்கு வழங்கினர்.

தரம் குறைந்த விதைகள் என்பதால் மூன்று கிலோவிற்கு பதில் கூடுதலாகவே அவர்கள் விதைகளை வழங்கினர். நாற்றாங்காலில் சிறிது பாதிப்பு ஏற்பட்டிருந்த போதும் போகப் போக

சரியாகிவிடும் என வேளாண் அலுவலர்கள் தெரிவித்தனர். நாற்று நட்டு பசுமைப் பிடித்த சில நாட்களிலேயே நெற்பயிர்கள் திடீரென காய்ந்து போனது. திடீர் நோய் தாக்கம் குறித்து அதிகாரிகளிடம் பல முறை புகார் தெரிவித்தும் நேரில் வந்து பார்க்காமல் அலட்சியமாக செயல்படுகின்றனர். நாளடைவில் இந்த ரகத்தை நடவு செய்திருந்த அனைத்து விவசாயிகள் பயிர்களும் முற்றிலும் காய்ந்து போய்விட்டது. இதனால் இந்தாண்டு மகசூல் பாதிக்கப்பட்டு தலா 30 ஆயிரம் ரூபாய் அளவில் விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர். இந்த புதிய நெல் ரகத்திற்கு செயல் முறை விளக்கத் திடல் என்று விதைகளை வழங்கிய வேளாண் துறையினர் இந்த பாதிப்பு குறித்தும் பார்வையிடவும், ஆலோசனை வழங்கவும் ஒரு முறை கூட வயலுக்கு வரவில்லை. ஆரம்பத்திலேயே கூறியிருந்தால் கூட பயிரினை உழவு செய்து மாற்றுப் பயிர் செய்து நஷ்டமடைவதை விவசாயிகள் தவிர்த்திருப்பார்கள்.
இது வரை அதிகாரிகள் கண்டுகொள்ளாமல் இருப்பது விவசாயிகளிடையே வேதனையை ஏற்படுத்தியுள்ளதாக விவசாயி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார். ஆய்வு செய்யப்படும் : நெற்பயிர்கள் பாதிப்பு குறித்து விதைகளை வழங்கிய திண்டிவனம் அறிவியல் நிலைய விதை பிரிவு அலுவலர் நாகராஜனிடம் கேட்டபோது., அந்த பகுதி நெற்பயிரில் திடீர் பாதிப்புகள் குறித்து விவசாயிகள் புகார் தெரிவித் துள்ளனர். எதிர்பாராத நோய் தாக்கத் தின் காரணமாக பாதிப்புகள் ஏற்பட் டிருக்கலாம். அந்த விவசாயி முன் கூட்டியே பூச்சி மருந்து அடித்ததன் காரணமா கவும் பாதிப்பு ஏற்பட்டிருக்கலம். நேரில் பார்த்தால்தான் கூறமுடியும். நோய் தாக்கத்தினை கண்ட றிய தற்போது சைன்டிஸ்ட்கள் இல்லை. விரைவில் பயிர்களை பார்வை யிட்டு பாதிப்புகள் கண்டறியப் படும் என நாகராஜன் தெரிவித்தார்.

**மா மரங்களில் பூ வைக்கும் சீஸன் துவக்கம் : மகசூல் அதிகரிக்கும் என எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2011,03:30 IST

நாமக்கல்: மா மரங்களில் பூ வைக்கும் சீஸன் துவங்கியுள்ளது. தவிர, மாவட்டம் முழுவதும் பரவலாக போதிய மழைப்பொழிவு இருந்ததால், இந்தாண்டு விளைச்சலும் நன்கு இருக்கும் என, விவசாயிகள் மத்தியில் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.
நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம், கொல்லிமலை அடிவாரம், எலச்சிபாளையம், மல்லசமுத்திரம் ஆகிய பகுதியில் 4,000 ஏக்கர் பரப்பளவில் மா விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. நீலம், பெங்களூரா, ஹிமாத்தீன், மல்கோவா, சேலம் பெங்களூரா, அல்போன்ஸா, ரோமானி போன்ற ரக மாம்பழங்கள் இப்பகுதியில் உற்பத்தி செய்யப்படுகின்றன.அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் அனைத்து ரக மாம்பழமும் மாவட்டம் முழுவதும் மட்டுமின்றி, சேலம், ஈரோடு, திருச்சி, கரூர் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு ஆங்காங்கே உள்ள விற்பனை மண்டிகள் மூலம் அனுப்பப்படுகிறது.

மா பொருத்தவரை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஃபிப்ரவரி மாதம் மரங்களில் பூ வைக்கும் சீஸன் துவங்கும். அடுத்தடுத்த மாதத்தில் காய்ப்பிடிப்பு ஏற்படும்.அதையடுத்து ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் மா அறுவடை சீஸன் துவங்கும். இந்தாண்டு நாமக்கல் மாவட்டம் முழுவதும் பரவலாக மழைப்பொழிவு இருந்தது. அதன்காரணமாக மா விளைச்சல் நன்கு இருக்கும் என, விவசாயிகள் மத்தியில் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

இது குறித்து மா விவசாயிகள் சிலர் கூறுகையில், ""நாமக்கல் மாவட்டத்தில் சேந்தமங்கலம், கொல்லிமலை, அடிவாரம், எருமப்பட்டி உள்ளிட்ட சுற்றுவட்டாரத்தில் மா விவசாயம் கணிசமான அளவில் மேற்கொள்ளப்படுகிறது. பல ஆண்டு வரை பலன் மா மரங்களில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஃபிப்ரவரி மாதங்களில் பூ வைக்கும் சீஸன் துவங்கிறது.""அதையடுத்து ஏப்ரல் துவங்கி ஜூன் வரை மா அறுவடை சீஸன் நடைபெறும். இந்தாண்டு நாமக்கல் மாவட்டத்தில் பரலவாக விவசாயிகள் எதிர்பார்த்தபடி மழைப்பொழிவு இருந்தது. இது அனைத்து விதமான பயிர்களுக்கும் உதவியாக இருந்தது. இம்மழைப்பொழிவால் மா மகசூல் நன்கு இருக்கும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது," என்றனர்.

**பாக்கு அறுவடை பணி விறுவிறுப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2011,03:27 IST

நாமக்கல்: நாமகிரிப்பேட்டை, சேந்தமங்கலம் ஆகிய பகுதியில் பாக்கு அறுவடைப் பணியை விவசாயிகள் துவக்கி விறுவிறுப்பாக ஈடுபட்டு வருகின்றனர். எதிர்பார்த்த மகசூல் கிடைத்ததால், விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டை, சேந்தமங்கலம் ஆகிய பகுதியில் 500 ஏக்கர் பரப்பளவில் பாக்கு விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மங்களா, சுபமங்களா, மேட்டுப்பாளையம் போன்ற ரக பாக்குகள் இப்பகுதியில் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆண்டுக்கு இரண்டு முறை என பாக்கு அறுவடை செய்யப்படுகிறது. அதன்படி ஃபிப்ரவரி, மார்ச், ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் பாக்கு அறுவடை செய்யப்படுகிறது.

அவ்வாறு அறுவடை செய்யப்படும் பாக்குகளை அதன் மேல் தோல் நீக்கம் செய்யப்படுகிறது. அதன்பின் அவை இரண்டு துண்டாக வெட்டி மாநிலம் முழுவதும் மட்டுமின்றி வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன. தற்போது மேற்குறிப்பிட்ட பகுதியில் பாக்கு அறுவை சீஸன் துவங்கியுள்ளது.இது குறித்து தோட்டக்கலைத்துறை அலுவலர் ஒருவர் கூறுகையில்,

""ஆண்டுக்கு இரண்டு முறை பாக்கு அறுவடை நடைபெறும். இந்தாண்டு மகசூல் எதிர்பார்த்த அளவுக்கு இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்," என்றார்.

**நோய் தாக்குதலால் வெற்றிலை பாதிப்பு : நிவாரணத்துக்கு விவசாயிகள் எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2011,02:47 IST

வேலாயுதம்பாளையம்: வேலாயுதம்பாளையம் சுற்றுப்பகுதி வெற்றிலைக்கு, பல்வேறு நோ ய் தாக்குதல் ஏற்பட்டுள்ளதால், பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுவதாக வெற்றிலை விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
புகளூர் சுற்றுப்புறத்தில் வேலாயுதம்பாளையம், நொய்யல், நடையனூர், மரவாபாளையம், சேமங்கி, கோம்புப்பாளையம், திருக்காடுதுறை, கட்டிபாளையம், பாலத்துறை, தவிட்டுப்பாளையம், சேம்படாபாளையம், தோட்டக்குறிச்சி, தளவாபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் 5,000க்கு மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த சில மாதங்களாக வெற்றிலையின் உற்பத்தி அதிகமாக இருந்ததால் விலையும் குறைவாகவே விற்கப்பட்டது. கடந்தாண்டு 2,500 முதல் 4,000 ஆயிரம் ரூபாய் வரை விலை ஏறிய பச்சைக்கொடி ரக வெற்றிலை, கடந்த இரண்டு மாதங்களாக ஒரு முடி 750 ரூபாய் வரையிலும் குறைந்துள்ளது. ஒரு ஏக்கர் வெற்றிலை சாகுபடிக்கு, விவசாயிகளின் கணக்குப்படி 100 கிடங்குக்கு 15 நாட்களுக்கு ஒருமுறை வெற்றிலை பறிக்கும் போது கடந்த காலங்களில் 5 லட்சம் ரூபாய் வரை கிடைத்தது. தற்போது, வெற்றிலை பறிக்கும் பணியாட்களுக்கு கூலி கொடுக்கவே பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.
புகளூர் வட்டார விவசாயி சுப்பிரமணி கூறியதாவது: சமீபத்தில் வெற்றிலை உற்பத்தி அதிகரித்து. ஆனால் சரியான விலை கிடைக்கவில்லை. தற்போது விலை ஏறி வரும்போது, வெற்றிலை இல்லை. கடந்த மாதங்களில் பெய்த தொடர்மழை மற்றும் தற்போது உள்ள பனி காரணமாக, தட்பட வெப்ப நிலை மாற்றம் ஏற்பட்டு வெற்றிலை பழுத்து கருகி சருகாகிறது.
சில இடங்களில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் ஏற்பட்டு உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. நோய் தாக்குதலுக்கு மருந்து கொடுக்க வேளாண்மை துறை சரியான நடவடிக்கை எடுக்கவில்லை. குறிப்பிட்ட சில பயனாளிகளை தேர்வு செய்து, அவர்களுக்கு மட்டும் மருந்து வழங்க ஏற்பாடு நடக்கிறது. குத்தகை எடுத்து சாகுபடி செய்யும் விவசாயிக்கு எந்த உதவியும் அளிக்கப்படுவதில்லை. இப்பகுதியில், பெரும்பாலும் குத்ததை எடுத்து சாகுபடி செய்வதுதான் அதிகமாக உள்ளது. அரசின் விதிமுறை காரணமாக, அதிக எண்ணிக்கையில் விவசாயிக்கு பயன் கிடைக்கவில்லை.

பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிக்கும் அரசு உதவி கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். நஷ்டஈடு வழங்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**ராஜராஜன் நெல் சாகுபடி பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,23:16 IST

மதுரை : மதுரை விவசாயக் கல்லூரி உழவியல் துறை சார்பில், நீர், நிலவளத் திட்டத்தின் கீழ் மேலூர், பெரியகற்பூரம் பட்டி விவசாயிகளுக்கு ராஜராஜன் நெல் சாகுபடி பயிற்சி அளிக்கப்பட்டது. துறைத் தலைவர் பாலசுப்ரமணியன் சாகுபடி நேர்த்தியை விளக்கினார். பூச்சியியல் துறைத் தலைவர் மணிசேகரன் நோய் மேலாண்மை குறித்தும், நெற்பயிரை தாக்கும் நோய்கள் குறித்து பேராசிரியர் தேரடிமணி விளக்கினர். ஆராய்ச்சியாளர்கள் செல்லதுரை, தமிழ்ச்செல்வி ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

**கரும்பு விளைச்சல் குறைவால் பொங்கல் கசக்குது இரண்டு நாட்களே உள்ளதால் அறுவடை தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,23:44 IST

நத்தம் : நத்தம், சாணார்பட்டியில் குறைந்தளவே கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ""பொங்கல் பண்டிகைக்கு'' இன்னும் இரண்டு நாட்களே உள்ள நிலையில் கரும்புகளுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் நத்தம், சாணார்பட்டியில் தைப்பொங்கலுக்காக கரும்பு அதிகளவில் சாகுபடி செய்யப்படுவது வழக்கம். இக்கரும்பு விவசாயத்தை நல்லமுறையில் கவனமுடன் பராமரிப்பு செய்ய வேண்டியிருப்பதாலும், விவசாயக்கூலி தட்டுப்பாட்டாலும் கடந்த ஐந்தாண்டுகளாக இவ்விவசாயத்தில் விவசாயிகள் அதிகளவில் ஈடுபடவில்லை. நத்தம் மற்றும் சாணார்பட்டி ஒன்றியத்திற்குட்பட்ட வத்திப்பட்டி, செல்லப்பநாயக்கன்பட்டி, செந்துறை, சாத்தாம்பாடி. சாணார்பட்டி, வீரசின்னம்பட்டி, ராகலாபுரம், கணவாய்பட்டி, கன்னியாபுரம் ஆகிய பகுதிகளில் குறைந்தளவே கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பொங்கல் பண்டிகைக்கு இன்னும் இரண்டு நாட்கள் உள்ள நிலையில் கரும்புகள் விற்பனைக்காக வெட்டப்படுகிறது.

மதுரை, திண்டுக்கல், திருச்சி, கோவை, தூத்துக்குடி பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் கரும்பு ஒன்றுக்கு ரூ.12 முதல் 10 வரை கொடுத்து மொத்தமாக கொள்முதல் செய்து லாரிகளில் ஏற்றிச் செல்கின்றனர். கடந்தாண்டுகளில் கரும்பு விளைந்த பகுதிகளில் ஒரு கரும்பின் விலை ரூ. 5 முதல் 7 வரை விற்கப்பட்டது. இந்தாண்டில் கரும்பு விளைச்சல் மிக குறைவாக இருப்பதால் இதன் விலை அதிகரித்துள்ளது. ஒரு கட்டு (10 கரும்பு) முதல் தரமுள்ளது ரூ. 200 முதல் 250 வரை

விற்கப்படுகிறது. ஏற்கனவே மற்ற பொருட்களின் விலை உயர்வால் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.இனிப்பான பொங்கலை கொண்டாட வேண்டிய மக்களுக்கு கரும்பு விலை உயர்வு கசப்பாக இருந்தாலும், தேவையை குறைத்து சந்தோஷப்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

**வியப்பூட்டும் விலையில் பூண்டு ஊறுகாய்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,23:24 IST

சிவகங்கை : பூண்டு விலை உயர்ந்ததால், ஊறுகாய் விலை வியப்பூட்டும் வகையில் உயர்ந்து விட்டது. மகாராஷ்டிராவில் அதிகளவில் பூண்டு பயிரிடப்படுகிறது. இவை தென் மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பபடுகிறது. இதில் பல்வேறு மருத்துவ குணங்கள் இருப்பதால் மருத்துவ பயன்பாட்டிற்கும், ஊறுகாய் தயாரிக்கவும் பயன்படுகிறது. மகாராஷ்டிராவில் பூண்டு பயிரில் நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. இதனால், உற்பத்தி குறைந்து பிற மாநிலங்களுக்கு செல்வது குறைந்துள்ளது. இதனால் பூண்டு விலை கடுமையாக உயர்ந்துள்ளது. 80 க்கு விற்ற ஒரு கிலோ சாதா பூண்டு 150 ரூபாய், 100 க்கு விற்ற சைனா பூண்டு 180, 160 க்கு விற்ற மலைப்பூண்டு 260 வரை விற்கிறது. இதனால் ஊறுகாய் விலையும் உயர்ந்துள்ளது. 45 க்கு விற்ற 300 கிராம் ஊறுகாய் 70 ரூபாய்க்கு விற்கிறது. ஊறுகாய் விற்பனையில் ஈடுபடும் மணிமேகலை கூறியது: "" பூண்டு விலை ஏற்றத்திற்கு முன்பு ஊறுகாய் தயாரிக்க கிலோவிற்கு 150 ரூபாய் செலவானது. இதில்,30 ரூபாய் லாபம் கிடைத்தது. விலை ஏற்றத்தால் வியாபாரம் குறைந்துள்ளது,'' என்றார்.

**நெற்பயிரில் குருத்துப்பூச்சி தாக்குதல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2011,03:24 IST

ஆழ்வார்குறிச்சி : மேலாம்பூர், கீழாம்பூர் பகுதிகளில் நெற்பயிரில் குருத்துப் பூச்சி நோயால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சுமார் 20 லட்சம் நிவாரண நிதி வழங்கப்பட உள்ளது.கடந்த 4 மாதங்களுக்கு முன் பெய்த தொடர்மழையால் மேலாம்பூர், கீழாம்பூர், ஆழ்வார்குறிச்சி உட்பட சுற்று வட்டார பகுதிகளில் பல விவசாயிகள் பயிரிட்டிருந்த விவசாய நெற்பயிர்களில் குருத்துப்பூச்சி தாக்கியது. இதனால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது. கீழாம்பூர் இந்திய கம்யூ., கட்சி மற்றும் விவசாயிகள் சங்கத்தின் சார்பில் குருத்துப் பூச்சி தாக்கியதால் பாதிப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வேண்டும் என வலியுறுத்தினர்.

சேரன்மகாதேவி சப்-கலெக்டர் வீரராகவராவ் தலைமையில் வருவாய்துறையினர் மற்றும் விவசாய துறையினர் குருத்துப்பூச்சி தாக்கிய இடங்களை ஆய்வு செய்த பின்னரும் நிவாரண நிதி வழங்கப்படவில்லை. எனவே இவர்கள் சாலை மறியல் செய்வதாக அறிவித்தனர். பின்னர் நடந்த சமாதான பேச்சுவார்த்தையில் விரைவில் நிவாரண நிதி வழங்கப்படும் என உறுதி கூறப்பட்டது. இந்நிலையில் மேலாம்பூர், கீழாம்பூர் பகுதிகளை சேர்ந்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 4 ஆயிரம் ரூபாய் என்ற வீதத்தில் சுமார் 20 லட்ச ரூபாய் நிவாரண நிதி வழங்கப்பட உள்ளது.

இந்திய கம்யூ., மற்றும் மாவட்ட விவசாயிகள் சங்க செயலாளர் கசமுத்து, ஆம்பூர் விவசாயிகள் சங்க தலைவர் சட்டநாதன், பஞ்., தலைவர் ஈஸ்வரன், மஞ்சள்புளி கால் நீர்பாசன சங்க தலைவர் ராமகிருஷ்ணன், கடையம், பாப்பாக்குடி ஒன்றிய பரமசிவன் மற்றும் விவசாயிகள், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று நிவாரண நிதி வழங்க நடவடிக்கை எடுத்த கலெக்டர் ஜெயராமன், சேரன்மகாதேவி சப்-கலெக்டர் வீரராகவராவ், அம்பை தாசில்தார் சுப்பிரமணியன், மண்டல துணை தாசில்தார் ஜஸ்டின் ஜெயபால், வேளாண்மை இணை இயக்குனர் தேவசகாயம், கடையம் வேளாண்மை உதவி இயக்குனர் ராஜசேகர், துணை வேளாண்மை அலுவலர் தவசி ஆசாரி, உதவி வேளாண்மை அலுவலர் முத்துசிதம்பரநாதன் உட்பட அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

**நெற் பயிரில் இலை சுருட்டு புழு கட்டுப்படுத்தும் வழிமுறைகள் : வேளாண் அதிகாரி விளக்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2011,03:22 IST

தென்காசி : நெற் பயிரில் இலை சுருட்டு புழுவை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் ஐரிஷ்சேகர் விளக்கியுள்ளார். இதுபற்றி அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:
""தென்காசி வட்டாரத்தில் மத்தளம்பாறை, ஆயிரப்பேரி, பாட்டப்பத்து, பண்பொழி, கொட்டாகுளம் கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற் பயிரில் இலை சுருட்டு புழு தாக்குதல் தென்படுகிறது. பச்சை கலந்த வெள்ளை நிறமுடைய இளம் பருவ இலை சுருட்டு புழுவானது நூலிழைகளால் இலையை நீள் வாக்கில் மடித்து உள்ளிருந்து கொண்டு பச்சையத்தை உண்கிறது. பாதிக்கப்பட்ட இலைகள் நீள் வாக்கில் வெள்ளை நிற சருகாக மறுபக்கம் தெரியும் அளவில் தென்படும். சில நேரங்களில் இலையின் நுனி பகுதி மடக்கப்பட்டு அடிப்பகுதியில் சேர்ந்து காணப்படும். தீவிரமாக பாதிக்கப்பட்ட பயிரில் அதிகளவிலான இலைகள் மடக்கப்பட்டு காய்ந்தது போன்று தோற்றமளிக்கும்.

இலைகள் நீள் வாக்கில் மடிக்கப்படுவதும் நீள் வாக்கில் வெள்ளை நிற கோடுகளாக பச்சையம் சுரண்டப்பட்டிருப்பதும் இப்பூச்சியின் தாக்குதலை எளிதாக கண்டுபிடிக்க உதவும் அறிகுறிகளாகும். இரவு நேரத்தில் சுறுசுறுப்பாக இயங்கும் இதன் அந்துப்பூச்சிகள் சிறியதாகவும், பழுப்பு கலந்த ஆரஞ்சு நிறத்தில் அல்லது மஞ்சள் நிறத்தில் அல்லது வெளிறிய மஞ்சள் நிறத்தில் இறக்கையில் கருமை நிற மூன்று அலை அலையான கோடுகளுடன் காணப்படும்.
அந்துப்பூச்சியானது பகல் நேரங்களில் இரை விழுங்கிகளிடமிருந்து காத்துக்கொள்ளும் பொருட்டு நிழல் பகுதியில் ஒழிந்து கொள்ளும். சாதகமான சூழ்நிலை
தேவைக்கு அதிகமான அளவில் உரமிட்ட வயல்களில் இப்பூச்சி தாக்குல் அதிகளவில் தென்படும். வயலிலும் வரப்போரத்திலும் களைகள் இருப்பது, இதுபோக நெற் சாகுபடி நடக்கும் இடங்கள் இப்பூச்சி தாக்குதல் தோன்ற சாதகமான சூழ்நிலைகளாகும். அதிக ஈரப்பதம் மற்றும் நிழல் பகுதிகளில் இப்பூச்சியானது அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது. பூச்சிகளின் எண்ணிக்கையில் எழுச்சியை ஏற்படுத்தக்கூடிய கார்போபியூரான் மற்றும் போரேட் குருணை மருந்துகளை தவிர்க்க வேண்டும்.கட்டுப்பாட்டு முறைகள் வளர்ச்சி பருவ நெற்பயிரானது இப்பூச்சியின் தாக்குதலை தாங்கி வளரும் திறமையுடையது. பூக்கும் பருவத்தில் கெடியிலைகள் பாதிக்கப்படும் பட்சத்தில் இப்பூச்சியின் பாதிப்பு பெருத்த மகசூல் இழப்பை ஏற்படுத்தும். எனவே விவசாயிகள் நெற்பயிர் பூக்க துவங்கும் தருணத்தில் மிகுந்த கவனத்துடன் வயலை கண்காணிக்க வேண்டும். இலை சுருட்டு புழுவிற்காக இளம் பருவத்தில் தெளிக்கும் சில பூச்சிமருந்துகள் புகையான் பூச்சியின் தாக்குதலுக்கு வழிவகுக்கும்.

சமச்சீரான அளவில் உரமிடுவதும், களைகளை நீக்கி வயலை சுத்தமாக வைத்திருப்பதும் இதனை கட்டுப்படுத்தும். நெருங்கி நடுவதை தவிர்ப்பது, அதிக அளவில் தழைச்சத்தை இடுவதை தவிர்ப்பது, போதுமான அளவில் பொட்டாஷ் உரத்தை இடுவது போன்ற எளிய வழிமுறைகள் இப்பூச்சி தாக்குதலை குறைக்கும். குளவிகள், ஊசித்தட்டான், எறும்புகள், சிலந்திகள் இப்பூச்சியை இயற்கையாகவே கட்டுப்படுத்தக்கூடியவை. விளக்கு பொறிகள் வைத்து அந்துபூச்சியை பிடித்து அழிக்கலாம். டிரைகோகிரம்மா கைகோலனிஸ் என்ற முட்டை ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 50 ஆயிரம் என்ற அளவில் மூன்று முறை வெளியிட வேண்டும்.வளர்ச்சி பருவத்தில் 10 சதத்திற்கும் மேலாக இலைகள் பாதிக்கப்படும் போது, பூக்கும் பருவத்தில் 5 சதத்திற்கும் மேலான கொடியிலைகள் பாதிக்கப்படும் போது பூச்சி கொல்லி மருந்துகள் தெளித்து இப்பூச்சியை கட்டுப்படுத்த வேண்டும்.

பேசில்லஸ் துரின்சியன்சிஸ் 400 மில்லி, அசாடிராக்டின் 0.15 சதம் 1 லிட்டர், அசாடிராக்டின் 5 சதம் 200 மில்லி, மோனோகுரோட்டோபாஸ் 36 சதம் 400 மில்லி, புரோபனோபாஸ் 50 சதம் 400

மில்லி, புளூபென்டையமைடு 39.35 சதம் 70 மில்லி, கார்போசல்பான் 25 சதம் 400 கிராம், குளோரான்டிரினிலிபுரோல் 18.5 சதம் 60 மில்லி, எத்தோபெனோபிராக்ஸ் 10 சதம் 200 மில்லி, பிப்ரோனில் 80 சதம் 20 கிராம் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு மருந்தை 200 லிட்டர் நீர் கலந்து ஒரு ஏக்கர் பரப்பில் தெளிக்கலாம். இப்பூச்சி கொல்லி மருந்து தெளிக்கும் போது ஒரு லிட்டர் நீருடன் ஒரு மில்லி ஒட்டும் திரவம் சேர்த்து தெளித்தால் முழுப்பலன் கிடைக்கும்" என வேளாண்மை உதவி இயக்குநர் ஐரிஷ்சேகர் அறிக்கையில் கூறியுள்ளார்.

## *பால் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு சம்பள உயர்வு அமைச்சர் மதிவாணன் அறிவிப்பு*

*சென்னை, ஜன.13–*

*பால் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு சம்பள உயர்வு அளிக்கப்படுவதாக அமைச்சர் மதிவாணன் அறிவித்தார்.*

*சட்டசபையில் பால்வளத் துறை அமைச்சர் உ.மதிவாணன் விதி 110ன் கீழ் அறிவித்ததாவது:–*

*ரூ.500 வரை உயரும்*

*பிரதம பால் கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு அந்த சங்கங்கள் 2008–09ம் ஆண்டு லாபத்தில் செயல்படும் பட்சத்தில் 20 சதவீதத்திற்கு மிகாது சம்பள உயர்வு வழங்க ஏற்கனவே ஆணையிடப்பட்டது.*

*அவ்வாணையின் அடிப்படையில் ஏற்கனவே 1.10.2009ல் வழங்கப்பட்ட சம்பள உயர்வில் தற்போது 54 சதவீதம் சம்பள உயர்வு அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி பணியாளர்கள் ஒவ்வொருவரும் குறைந்தபட்சமாக மாதம் ரூ.125லிருந்து அதிகபட்சமாக ரூ.500 வரை பயன்பெறுவர்.*

*18 ஆயிரம் பணியாளர்கள்*

*இதுதவிர 1.10.2009 முதல் வழங்கப்பட்ட சம்பள உயர்வில் பயனடையாதவர்கள் மற்றும் 1.4.2009க்கு பிறகு பதிவு செய்யப்பட்ட, மறுமலர்ச்சி செய்யப்பட்ட சங்கங்களின்*

பணியாளர்களுக்கு ரூ.125 வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள 8246 பிரதம பால் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் சுமார் 18,588 பணியாளர்கள் பயனடைவார்கள். இந்த சம்பள உயர்வு 1.1.2011 முதல் அமல்படுத்தப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

## தேவை உயர்ந்து வருவதால் இயற்கை ரப்பர் விலை குறைய வாய்ப்பில்லை



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

சர்வதேச அளவில் இயற்கை ரப்பர் உற்பத்தி பெரிதும் குறைந்துள்ளது. இந்நிலையில் டயர் உற்பத்தி நிறுவனங்களில் இதற்கான தேவைப்பாடு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, இயற்கை ரப்பர் விலை குறைய வாய்ப்பில்லை என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பருவநிலை

நம் நாட்டில், இயற்கை ரப்பர் உற்பத்தியில் கேரள மாநிலத்தின் பங்களிப்பு 90 சதவீதமாக உள்ளது. ஆனால், கடந்த சில மாதங்களாக அங்கு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. சென்ற ஞாயிற்றுக்கிழமை அன்று, கோட்டயம் மற்றும் கொச்சி சந்தைகளில், ஒரு கிலோ இயற்கை ரப்பர் விலை ரூ.214.50–ஆக இருந்தது. அதேசமயம், சர்வதேச சந்தைகளில் விலை ரூ.239–ஐ எட்டியுள்ளது. உலக அளவில் இயற்கை ரப்பர் உற்பத்தி செய்யப்படும் நாடுகளில் பருவநிலை சாதகமாக இல்லாத காரணத்தால்

உற்பத்தி சரிவடைந்து அளிப்பு குறைந்துள்ளது.

அமெரிக்காவில், ரப்பர் உற்பத்தி அதிகரிக்கும் என முன்பு மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், அங்கு மதிப்பீட்டைக் காட்டிலும் உற்பத்தி குறைந்ததையடுத்து இயற்கை ரப்பர் பற்றாக்குறை ஏற்படும் நிலை உள்ளது. இதன் காரணமாகவே சர்வதேச அளவிலும், இந்தியாவிலும் ரப்பர் விலை உயர்ந்துள்ளது என சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது குறித்து இந்திய ரப்பர் டீலர்கள் கூட்டமைப்பின் பொருளாளர் இப்ராம் ஜலால் கூறும்போது, "சர்வதேச அளவில் இயற்கை ரப்பர் விலை அதிகரித்துள்ளது. இனிவரும் காலத்தில் தேவைப்பாடு மேலும் உயரும். சர்வதேச அளவில் விலை உயர்வை தொடர்ந்து உள்நாட்டிலும் விலை அதிகரித்துள்ளது. இருப்பினும், இதனால் உள்நாட்டில் ரப்பர் அளிப்பில் இதுவரை பாதிப்பு ஏற்படவில்லை" என்று தெரிவித்தார்.

உற்பத்தி

கடந்த 2010–ஆம் ஆண்டு இந்தியாவின் இயற்கை ரப்பர் உற்பத்தி 8.50 லட்சம் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், நாட்டின் ஒட்டுமொத்த தேவைப்பாடு ஆண்டுக்கு 10 லட்சம் டன்னாக உள்ளது.

## நடப்பு 2011–ஆம் ஆண்டில் இந்தியாவில் பால் உற்பத்தி 12.15 கோடி டன்னாக உயரும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

*இந்தியாவில், நடப்பு 2011–ஆம் ஆண்டில், பால் உற்பத்தி 12.15 கோடி டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற 2010–ஆம் ஆண்டைக் காட்டிலும் 4 சதவீதம் அதிகமாகும். இது, அமெரிக்க வேளாண் துறை வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*சென்ற ஆண்டில், இந்தியாவில் 11.35 கோடி டன் பால் உற்பத்தி ஆகும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மதிப்பீட்டையும் விஞ்சி உற்பத்தி 11.70 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. சாதகமான பருவநிலை, போதுமான அளவில் கால்நடை தீவனங்களின் கையிருப்பு ஆகியவையே இதற்கு காரணம் என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*கடந்த 2009–ஆம் ஆண்டில் நாட்டின் பால் உற்பத்தி 11.20 கோடி டன்னாக குறைந்து இருந்தது. அவ்வாண்டில் பருவமழை பொய்த்ததே இதற்கு காரணமாகும்.*

*இந்தியாவில் பொதுத்துறை மற்றும் தனியார் பால் பண்ணைகளுக்கு அளிக்கப்படும் நிர்வாக பயிற்சியால் இனிவரும் காலங்களில் பால் உற்பத்தி மேலும் அதிகரிக்கும் என அமெரிக்க வேளாண் துறை தெரிவித்துள்ளது.*

*உலக அளவில் பால் பொருள்கள் உற்பத்தியில் இந்தியா முன்னணியில் உள்ளது. இருப்பினும், அதிகரித்து வரும் மக்கள் தொகையால், பால் பொருள்களுக்கான தேவைப்பாடு அதிகமாக உள்ளது.*

## டெல்லியில் வெங்காய வியாபாரிகள் போராட்டம் வாபஸ்

*புதுடெல்லி, ஜன.13–*

*வெங்காய விலை உயர்வைத் தொடர்ந்து வருமானவரித் துறை அதிகாரிகள் டெல்லியில் உள்ள ஆசியாவின் பெரிய மார்க்கெட்டான ஆசாத்பூர் மார்க்கெட்டில் சோதனை நடத்தியதற்கு எதிர்ப்பு தெரிவித்து வியாபாரிகள் சங்கத்தினர் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்துக்கு அழைப்பு விடுத்து இருந்தனர்.*

*இதனை தடுத்துநிறுத்தும் வகையில் டெல்லி அரசு அத்யாவசிய பொருட்கள் தடை சட்டத்தை அறிவித்தது.*

*இந்த நிலையில் ஆசாத்பூர் காய்கறி வியாபாரிகள் சங்க செயலாளர் ராஜீந்தர் சவுத்ரியுடன் டெல்லி முதல்–மந்திரி ஷீலா தீட்சித் நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தை முடிந்து வெளியே வந்த வியாபாரிகள் சங்க செயலாளர் ராஜீந்தர் சவுத்ரி, முதல்–மந்திரியுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதைத்*

தொடர்ந்து எங்களது காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தை வாபஸ் பெறுவதாக தெரிவித்தார்.

## கரும்பு குவியல்



பொங்கல் விற்பனைக்காக சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் குவிந்துள்ள கரும்பு கட்டுகள்.